**கவனிக்க.**- *2017.03.17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* III, *பகுதி* IV *(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2012 - 2017 මාර්තු මස 24 වැනි සිකුරාදා - 2017.03.24

*2012 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *519* |


**கவனிக்க.**- (i) புலமைச் சொத்து (திருத்தம்) சட்டமூலம் *2017*, மாச்சு மாதம் *03* ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும் நிருவகித்தலும் பணிகளை நிறைவேற்றுதலும்) (திருத்தம்) சட்டமூலம் *2017*, மாச்சு மாதம் *03* ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது *2017*, ஏப்பிறல் மாதம் *12* ஆந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் *2017*, மாச்சு மாதம் *31* ஆந் திகதி நண்பகல் *12.00* மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விவசாய அமைச்சு

விவசாயத் திணைக்களம்

### விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவை பதவிகளில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017

விவசாயத் திணைக்களத்தின் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையில் விவசாயப் போதனாசிரியர்/ ஆராய்ச்சி உதவியாளர் ஆகிய பதவிகளின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.04.21 ஆகும்.

*2.1 **திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல் :***

*2.1.1 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2017.04.21 ஆந் திகதியில் விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கேற்ப, வயது சம்பந்தமான தகுதியான விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 1998.04.21 அல்லது அதற்கு முன்னரான திகதியாகவும், 1986.04.21 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னரான திகதியாகவும் இருக்க வேண்டும்).*

*2.1.2 பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் விண்ணப்பதாரிகள் கீழ்வரும் அடிப்படை கல்வித் தகைமைகளையும் தொழிற் தகைமைகளையும் பெற்றிருத்தல் அவசியமாகும்.*

| பதவிக்குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | 2.1.3 கல்வித் தகைமைகள் | | 2.1.4 தொழிற் தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | க.பொ.த. (சா. த.) | க.பொ.த. (உ. த.) | |
| 1<br><br>2 | விவசாயப் போதனா சிரியர்<br><br>ஆராய்ச்சி உதவி யாளர் | சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி கணிதம், விஞ்ஞானம் அத்துடன் இன்னுமோர் பாடத்திலும் திறமை சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் க.பொ.த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி பெற்றி ருத்தல். | விவசாய விஞ்ஞானம், உயிரியல், இரசாயன வியல், பௌதீக வியல், விலங்கியல், தாவரவியல் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்கள் உட்பட மொத்தம் மூன்று விஞ்ஞானப் பாடங் களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி அடைந் திருத்தல் (பொது ஆங்கிலம் பொதுப் பரீட்சை நீங்கலாக) | (i) மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்படும் இரு வருட விவசாய டிப்ளோமா அல்லது<br>(ii) தொழிற்துறையுடன் தொடர்பான தேசிய தொழிற்திறன் (NVQ) 6 மட்டத்திலான தகைமை பெற்றிருத்தல் அல்லது<br>(iii) உயர் கல்வி அமைச்சினாலும் மேற்கூறிய தொழில் நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங் களிலிருந்தும் தேவை யான ஆலோசனை களைப் பெற்று மேற் கூறிய தொழில்நுட்ப தகைமைகளை சகல |

*(தொடர்ச்சி)*

| *பதவிக்குரிய குறியீட்டு இலக்கம்* | *பதவி* | *2.1.3 கல்வித் தகைமைகள்* | | *2.1.4 தொழிற் தகைமைகள்* |
|---|---|---|---|---|
| | | *க.பொ.த. (சா. த.)* | *க.பொ.த. (உ. த.)* | |
| | | | | வழிகளிலும் சமமான தென மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப சான் றிதழைப் பெற்றிருத்தல். |

2.1.5 *ஏனைய தகைமைகள்.-* அனைத்து விண்ணப்பதாரிகளும் கீழ்க்குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்துள்ளமை அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;
* ஏதேனும் மதப் பிரிவொன்றில் குருக்களாகக் கடமையாற்றும் எவரும் இந்தப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தகைமையற்றவர்களாவர் ;
* நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்காக பொருத்தமான உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.2 ***மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் :***

*2.2.1*

| *பதவிக்குரிய குறியீட்டு இலக்கம்* | *பதவி* | *2.2.2 கல்வித் தகைமைகள் க. பொ. த. (சா. த.)* | *2.2.3 தொழிற் தகைமைகள்* | *அனுபவம்* |
|---|---|---|---|---|
| 1<br><br>2 | விவசாயப் போதனா சிரியர்<br><br>ஆராய்ச்சி உதவி யாளர் | சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம், விஞ் ஞானம் மேலும் ஒரு பாடத்திலும் திறமைச் சித்தியுடன் இரண் டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு (06) பாடங் களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் | மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றால் வழங்கப்படும் இரு வருட விவசாய டிப்ளோமா<br>அல்லது<br>தொழிற்துறையுடன் தொடர்பான தேசிய தொழிற்திறன் (NVQ) 6 மட்டத்திலான தகைமை பெற்றிருத்தல்<br>அல்லது<br>உயர் கல்வி அமைச்சி னாலும் மேற்கூறிய தொழில்நுட்ப சான்றிதழ் களை வழங்கும் நிறு வனங்களிலிருந்தும் தேவையான ஆலோ | உரிய துறையில் திணைக்களத்திற்குரிய நிரந்தர பதவியொன் றில் தொழிற்தகைமை களுடன் 05 வருட செயலூக்கத்துடனான திருப்திகரமான அனு பவத்தைப் பெற்றி ருத்தல். |

*(தொடர்ச்சி)*

| பதவிக்குரிய குறியீட்டு இலக்கம் | பதவி | 2.2.2 கல்வித் தகைமைகள் க. பொ. த. (சா. த.) | 2.2.3 தொழிற் தகைமைகள் | அனுபவம் |
|---|---|---|---|---|
| | | | சனைகளைப் பெற்று மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளை சகல வழி களிலும் சமமானதென மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணைக் குழுவால் ஏற்றுக்கொள் ளப்படும் தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றி ருத்தல். | |

*2.2.4 ஏனைய தகைமைகள் :*

(i) நியமனம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் ;
(ii) உரிய தினத்திலே 5 வருட திருப்தியான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

3. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அலுவலர் அனைத்துத் தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருந்தால் மாத்திரம் சேவையில் ஆட்சேர்த்துக்கொள்வதற்கான எழுத்துமூலப் பரீட்சையில் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதப்படும்.

4. திணைக்களத்தில் தற்போது காணப்படும் வெற்றிட எண்ணிக்கையில் 70% திறந்த போட்டிப் பரீட்சை மூலமும், 30% மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் போதியளவு அடிப்படைத் தகைமைகளையுடைய உள்ளக விண்ணப்பதாரிகள் விவசாயத் திணைக்களத்திற்குள் இல்லாதவிடத்து எஞ்சிய எண்ணிக்கை திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளிலிருந்து பூர்த்திசெய்யப்படும். மேலும், ஏதேனும் வெற்றிட எண்ணிக்கையினை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

**சம்பளமும் தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையும்.**- சம்பள குறியீட்டு இலக்கம் : எம். என். 03/ 2006A

சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 31,040 - 10 x 445 - 11 x 660 - 10 x 730 - 10 x 750 - ரூபா 57,550 ஆகும்.

2020.01.01 வரையான சம்பள ஏற்றங்கள், கொடுப்பனவுகள் என்பன பொது நிருவாக சுற்றுநிருபம் 3/ 2016 இன் ஏபுற்பாடுகளுக்கமைய செலுத்தப்படும்.

III ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற 3 வருடங்களுக்குள் முதலாவது தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையிலும், II ஆம் தரத்திற்குப் பதவி உயர்த்தப்பட்டு 3 வருடங்களுக்குள் இரண்டாவது தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும். அரசகரும மொழி அல்லாத மொழி ஒன்றில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அலுவலர் ஒருவர் தகுதிகாண் காலத்தினுள் விதிக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். நியமனத் திகதியிலிருந்து 5 வருடத்திற்குள் பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியினை பொ. நி. சு. 07/ 2007 இன் I (ஆ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு அரச கரும மொழிகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் இரண்டாம் நிலை திறன் மட்ட மொழிக் கற்கைநெறிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இவ்வரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளாமை அல்லது தகுதிகாண் தடைதாண்டல் பரீட்சையில் குறித்த காலப்பகுதிக்குள் சித்தியடையாமை எதிர்கால சம்பள ஏற்றம் தள்ளிப்போடப்படுவதற்குக் காரணமாக அமையலாம்.

5. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனை :**

(i) இப்பதவி நிரந்தரமானதாகும். அரச கொள்கைகளுக்கேற்ப ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

(ii) குறித்தொதுக்கப்படும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு கடமைப்பட்டிருப்பதோடு கண்டி (ஹசலக), அம்பாறை, அம்பாந்தோட்டை, பொலன்னறுவை, மொனராகலை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள சேவை நிலையங்களிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள சேவை நிலையங்களிலும் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னுரிமையளிக்கப்படும்.

(iii) 1930/ 12 ஆம் இலக்க 2015.09.01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டு தற்போது செயல்வலுவிலுள்ள இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்திலும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

**6. விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விண்ணப்பத்தை ஏ4 (21செ. மீ. x 29 செ. மீ.) அளவுடைய தாளை உபயோகித்து அதன் இரு பக்கத்திலும் அமையுமாறு இலக்கம் 1 முதல் 3 வரை முதலாம் பக்கத்திலும் இலக்கம் 4 முதல் 6 வரை இரண்டாம் பக்கத்திலும் 7 முதல் 10 வரை மூன்றாம் பக்கத்திலும் எஞ்சியவை நான்காம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரித்தல் வேண்டும். உரிய தகவல்கள் தமது சொந்தக் கையெழுத்தினால் எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்பொழுது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பப்படிவங்களும் முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவுறுத்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் (Photo state) பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் விரும்பத்தக்கது. பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமைந்துள்ளனவா என விண்ணப்பதாரி பரிசீலனை செய்து பார்த்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(ஆ) திறந்த/ மட்டுப்படுத்திய இரு போட்டிப் பரீட்சைகளும் ஒரே பரீட்சையாக நடாத்தப்படுவதால் ஒரு விண்ணப்பதாரிக்கு திறந்த/ மட்டுப்படுத்திய இரு போட்டிப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பிக்க முடியாது. இதன்படி, விண்ணப்பதாரி ஒருவர் திறந்த/ மட்டுப்படுத்திய இரு பரீட்சைகளில் ஒரு பரீட்சைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

(இ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள 2 பதவிகளுக்கும் எவரேனும் விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் பயன்படுத்தல் வேண்டும்.

(ஈ) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

(உ) முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2017.04.21 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், "விவசாயப் பணிப்பாளர் நாயகம், நிருவாகக் கிளை 01, விவசாயத் திணைக்களம், தலைமை அலுவலகம், பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியலாளர் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை - 2017" எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(எ) விண்ணப்பதாரி ஒருவருக்கு ஒரு பதவிக்கு அல்லது இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிக்க முடியும். இதற்கான பரீட்சைக் கட்டணம் 600 ரூபா ஆகும். அப்பணத்தை விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் 057-1001-7-902-7204 கணக்கில் நாடு பூராகவுமுள்ள எந்த ஒரு மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியினை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் எதிர்காலத்தில் பயனளிக்கும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதுடன் காசுக் கட்டளை, முத்திரை என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஏ) முறையாகப் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவமொன்று தபாலில் காணாமல் போனமை அல்லது தாமதமாகக் கிடைத்தமை தொடர்பாக திணைக்களம் பொறுப்புக்கூற மாட்டாது.

(ஐ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு திணைக்களத்தின் ஊடாக பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை திணைக்களத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு இல்லாத விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர்,

*பிரதேசத்தின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, சட்டத்தரணி அல்லது முப்படைகளின் பதவி நிலை அலுவலர் ஒருவர் அல்லது 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேலதிகமான வருடாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்திப்படுத்தப்படல் வேண்டும்.*

(ஒ) *ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களைத் தமது திணைக்களத் தலைவரினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

7. ***பரீட்சை நடைமுறை :***

(அ) *வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனக் கருதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையுடைய, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி, நகரம், விண்ணப்பிக்கும் பதவி, விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தியும், பொருத்தமாயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழையும் கொண்டு, முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரிகள் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சை அதிகாரிக்கு தமது கையொப்பம் உறுதிசெய்யப்பட்ட பரீட்சை அனுமதி அட்டைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது. பரீட்சை அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதாவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளதாகக் கருதப்படலாகாது.*

(ஆ) *விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட உடனேயே அதுபற்றிய அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரமாகி 2 அல்லது 3 நாட்களில் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். தம்வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தினதும், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் நிழற்படப் பிரதியுடன் பதிவுத் தபாலிலிட்ட பற்றுச்சீட்டையும் அத்துடன் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், உமது பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் என்பவற்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளைக்கு அறிவித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியே இருப்பவர்கள் மேற்கூறிய விபரங்களுடன் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தமது தொலைநகல் (Fax) இலக்கத்தையும் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் (Fax) மூலம் அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.*

(இ) இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பதாரிகளுக்கு எவ்வித பிரயாணச் செலவுகளோ வேறு கொடுப்பனவுகளோ வழங்கப்பட மாட்டாது.

(ஈ) ***ஆளடையாளம்.-*** *பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை நிலையப்* பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காகக் கீழ்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) *ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;*
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(உ) ***பாடப்பரப்பு :***

(i) *விவேகப் பரீட்சை.- (1 மணித்தியால வினாத்தாள்) - 100 புள்ளிகள். பரீட்சார்த்தியின் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வுத் திறன், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பவற்றை மதிப்பிடுவதற்கான பல்தேர்வு சுருக்க விடை கோரும் 50 வினாக்களைக் கொண்டதாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.*

(ii) தொழில்நுட்பவியல்சார் வினாத்தாள் (2 மணித்தியால வினாத்தாள்) – 100 புள்ளிகள். பரீட்சார்த்தியின் விடய அறிவை மதிப்பிடுவதற்கான கட்டமைக்கப்பட்ட வினாக்களைக் கொண்ட வினாத்தாளாகும்.

| பதவி | தொழில்நுட்ப வினாத்தாளுக்குரிய பாடப்பரப்பு |
|---|---|
| (1) விவசாயப் போதனாசிரியர்<br>(2) ஆராய்ச்சி உதவியாளர் | இலங்கைப் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்களிப்பு இலங்கைக் காலநிலை வலயங்கள் பற்றிய அறிவு, மண் பயிர் போசணை, நெல் உற்பத்தி, ஏனைய வயல் பயிர்கள் உற்பத்தி, காய்கறி உற்பத்தி, பழ உற்பத்தி, பயிர் பாதுகாப்பு, மண் பாதுகாப்பின் முக்கியத்துவமும் பல்வேறு மண் பாதுகாப்பு முறைகளும் நீர்ப்பாசன முறைகளும் நீர் முகாமையும் பண்ணை இயந்திரமயமாக்கல், தேனீ வளர்ப்பு, மலர் வளர்ப்பு, தரை அலங்காரம், பாதுகாக்கப்பட்ட பயிர்ச் செய்கைகள், கால்நடை வளர்ப்பு, விவசாய விரிவாக்கம், தாவர தடுப்புக்காப்பு, தாவர பாதுகாப்பும் அதன் முக்கியத்துவமும், உயிரியல் தொழில்நுட்பம், விதை உற்பத்தி, விவசாய அபிவிருத்தி, இழைய வளர்ப்பு ஆகிய விடயங்களைக் கொண்டு வினாப்பத்திரத்திலேயே விடையளிக்க வேண்டிய வினாப்பத்திரம். |

(ஊ) ***மொழி மூலம்.***– இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தாம் தோற்றும் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(எ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி பரீட்சைக் கட்டணம் செலுத்தி உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பப்பத்திரங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர் அனைவருக்கும் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவதாவது விண்ணப்பதாரி இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாகக் கருதப்பட மாட்டாது. கீழே (உ) இல் குறிப்பிடப்பட்ட உரிய 02 பதவிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாக இருந்தால் அவை அனைத்தையும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் அனுப்பி வைத்தல் வேண்டும். பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் மேற்கொள்ளும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்கள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகம் விதிக்கும் தண்டனைகளுக்கும் ஆளாக நேரிடலாம்.

(ஏ) ***பரீட்சை நடைபெறும் இடமும் திகதியும்.***– இப்பரீட்சை 2017, யூன் மாதம் கொழும்பிலும் கண்டியிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து கொழும்பில் மாத்திரம் பரீட்சையை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும். (விண்ணப்பித்த நகரத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.)

| பரீட்சை நிலையம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 1 |
| கண்டி | 2 |

8. **ஆட்சேர்ப்பு முறை :**

(i) மேற்கூறிய பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளிற்கும் 40% அல்லது அதற்கு அதிகமாக பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்படும் முன்னுரிமை பட்டியல் ஊடாக தெரிவுசெய்யப்படுவர்.

(ii) விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபை மூலம் இப்பரீட்சையின் புள்ளியினை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரியின் தகைமைகளைப் பரீட்சித்து தகைமைகளைப் பூர்த்திசெய்தவர்கள் மாத்திரம் வெற்றிடத்துக்காக தேர்வுசெய்யப்படுவர். (நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

(iii) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் எண்ணிக்கை விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

(iv) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் தகைமைகள் பூரணப்படுத்தப்படவில்லை என நேர்முகப் பரீட்சையின்போது தெரியவரும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத் தன்மை நிராகரிக்கப்படும்.

(v) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் பூரணப்படுத்தப்படாமலேயே பரீட்சைக்குத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்தாலும் நேர்முகப் பரீட்சைக்காக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் எவ்வித அறிவித்தலுமின்றி அவரது விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

(vi) (அ) இப்பரீட்சைக்கான நிபந்தனைகளின் பிரகாரம் விண்ணப்பதாரர் ஒருவர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை அற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர், பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில், பரீட்சைக்குப் பின்னர் ஆகிய எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தத் தன்மை நிராகரிக்கப்படலாம்.

(ஆ) விண்ணப்பதாரி ஒருவரால் வழங்கப்பட்ட தகவல் பிழையானதெனப் பின்னர் தெரியவருமிடத்து அவர் வேண்டுமென்றே ஏதும் தகவல் ஒன்றை மறைத்துள்ளார் எனத் தெரியவருமிடத்து அவருக்கு நியமனம் ஒன்றை வழங்குவது தொடர்பாகக் கவனத்திலெடுக்கப்பட மாட்டாது. அத்துடன் இது இப்பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட பதவி செல்லுபடியற்றதாக்கப்படவோ அல்லது அரச சேவையிலிருந்து நீக்கப்படவோ காரணமாகலாம்.

(vii) ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதற்கு மேல் பெற்று சித்தியடையும் பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியலொன்று விவசாயத் திணைக்களப் பணிப்பாளரின் அனுமதியுடன் வெளியிடப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் தபாலில் அனுப்பிவைக்கப்படுவதோடு www.results.exams.gov.lk இணையத்தள முகவரியிலும் வெளியிடப்படும்.

9. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக நியமன அதிகாரி இறுதி முடிவெடுப்பார். அனைத்து விண்ணப்பதாரிகளும் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட பொதுப் பரீட்சை சட்டதிட்டங்களுக்கேற்ப செயற்படுவதற்குக் கடமைப்பட்டுள்ளனர்.

10. மும்மொழிகளிலுமான இவ்வறிவித்தலில் முரண்பாடுகள் காணப்படுமாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலே செல்லுபடியானதாக கருதப்படும்.

(கலாநிதி) ஆர். ஆர். ஏ. விஜேகோன்,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
2017, மாச்சு 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**விவசாயத் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவைப் பதவிகளில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2017**

Application for Open/Limited Competitive Examination for Recruitment to Vacancies the Grade III of the Sri Lanka Technological Service in the Department of Agriculture

விண்ணப்பிக்கும் பரீட்சை :

திறந்த போட்டிப் பரீட்சை 1
மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை 2

☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :

சிங்களம் 2
தமிழ் 3
ஆங்கிலம் 4

☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

பரீட்சைக்கு தோற்ற உள்ள பரீட்சை நிலையம் :

கொழும்பு - 1
கண்டி - 2

☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பதவி :

விவசாயப் போதனாசிரியர் - 1
ஆராய்ச்சி உதவியாளர் - 2

| பதவி | இலக்கம் |
|---|---|
| | |
| | |

(உரிய பதவியையும் இலக்கத்தையும் கூட்டினுள் எழுதவும்.)

1. பெயர் :-

1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் பின்னரும் வருமாறு (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதா : GUNAWARDHANA H. M. S. K)

1.3 முழுப்பெயர் (சிங்களம்/ தமிழில்):----.

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

1.5 தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. நிரந்தர முகவரி :-

2.1 ஆங்கில பெரிய எழுத்துக்களில் :----.

2.2 சிங்களத்தில்/ தமிழில் :----.

2.3 அனுமதி அட்டைகளை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2.4 வதியும் மாவட்டம் :----.

2.5 பிரதேச செயலகப் பிரிவு :----.

3. பால் :

(ஆண் - 0, பெண் - 1)

☐

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

4. பிறந்த திகதி :

4.1 ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது (2017.04.21) :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.3 விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :----.

விவாகமாகாதவர்- 1
விவாகமானவர் - 2

☐

(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

5. கல்வித் தகைமைகள் (மொழி மூலத்துடன்) :

(அ) கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சை :

முதல் அமர்வு :
(i) வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) மொழி மூலம் :----.
(iv) பரீட்சை முடிவுகள் :-

இரண்டாம் அமர்வு :
(i) வருடமும் மாதமும் :----.
(ii) பரீட்சை சுட்டெண் :----.
(iii) மொழி மூலம் :----.
(iii) பரீட்சை முடிவுகள் :-

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |
| 4. | | 4. | |
| 5. | | 5. | |
| 6. | | 6. | |
| 7. | | 7. | |
| 8. | | 8. | |
| 9. | | 9. | |
| 10. | | 10. | |

(ஆ) கல்வி பொதுத் தராதரப் (உ. த.) பரீட்சை :

(i) வருடமும் மாதமும் :------------------------------
(ii) பரீட்சை சுட்டெண் : ------------------------------
(iii) மொழி மூலம் :------------------------------
(iv) பரீட்சை முடிவுகள் :-

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

6. தொழிற் தகைமைகள் :-

| டிப்ளோமா | டிப்ளோமா வழங்கிய நிறுவனத்தின் பெயர் | சித்தியடைந்த வருடம் | மொழி மூலம் | பரீட்சை சுட்டெண் | டிப்ளோமா செல்லுபடி யாகும் திகதி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

7. அனுபவம் :----.
(மட்டுப்படுத்திய விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

7.1 தற்போது வகிக்கும் பதவி :----.
7.2 அப்பதவியில் நியமிக்கப்பட்ட திகதி :----.
7.3 அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
7.4 நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடனானதுமான சேவைக்காலம் :----.
7.5 2015, ......................... ஆந் திகதி உடன் முன்னரான 5 வருட காலத்திற்குரிய அனைத்துச் சம்பள உயர்வு களையும் பெற்றுள்ளீரா ? :----.

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கி அல்லது வங்கிக் கிளை :----.
   8.1 கட்டணம் செலுத்தப்பட்ட திகதி :----.
   8.2 பற்றுச்சீட்டு இலக்கம் :----.
   8.3 செலுத்திய தொகை :----.

| |
|---|
| பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை தம்வசம் வைத்துக்கொள்ளவும்) |

9. இப்பரீட்சை நிபந்தனைகள் அனைத்தையும் பேணி நடக்க இணங்குகிறேன்.

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை.- இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிமொழிகிறேன். இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் அறிய நேர்ந்தால் தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனம் பெற்ற பின் அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் பரீட்சை நடைபெறுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களை பேணி நடப்பதாகவும் இணங்குகிறேன். அத்துடன் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவேன் எனவும், அவ்வாறே நான் விண்ணப்பிக்கும் பதவிகளுக்காக ஒரு விண்ணப்பப்பத்திரத்தை மாத்திரம் அனுப்பி வைப்பதாகவும் உறுதியளிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................. எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் இவர் ................................ ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)
திகதி :----.

11.1 ஏற்கனவே அரச சேவையில்/மாகாண அரச சேவையில் இணைந்திருப்பவர்களுக்காக (தேவையற்றதை கீறிவிடவும்).

மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் தோற்றுவதற்காக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உண்டு/ இல்லை எனவும் அவர் இப்பரீட்சையில் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இத்திணைக்களத்தில் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது/ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். அத்துடன் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப் பெயரும் (பதவி முத்திரை).

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தவும்)
திகதி :----.

(மட்டுப்படுத்திய விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

12. பிரிவுத் தலைவர் கையொப்பம் :

திரு./ திருமதி/ செல்வி ............................................. என்பவர் .............................. ஆந் திகதி முதல் இதுவரை இப்பிரிவில் ................................ நிரந்தர பதவியில் கடமையாற்றுகிறார். அவரின் கடமைகள் வரவு, நடத்தை என்பன திருப்திகரமானவையாகும்.

இவர் ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்றுக்கு ஆளாகியுள்ளார்/ இல்லை, மேலே 1 முதல் 10 வரை வழங்கப்பட்டுள்ள விடயங்கள் சரியானவை என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பத்தினைச் சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

----,
பிரிவுத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரையும் திகதியும் :

3-1060

---

## ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திரசிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2017, பங்குனி

2014.10.11 ஆந் திகதிய 1883/ 17 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சேவையின் வைத்திய உத்தியோகத்தர்கள் தொடர்பான நியதிச் சட்டக்கோவையின் 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்திற்கு உயர்த்தப்படுவதற்கு முன்பும், பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்கள் தமது சேவையில் உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்பும், நிர்வாக தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் அந்நியமனம் கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து இரண்டு வருடங்களினுள் தேர்ச்சியடைய வேண்டிய திணைக்களப் பரீட்சை 2017.04.29 ஆந் திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் இடமும் கால அட்டவணையும் பிரவேசப்பத்திரத்துடன் அனுப்பிவைக்கப்படும்.

2. **தகைமைகள்**.- உரிய பரீட்சையினைப் பூரணப்படுத்தாத ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களும், நியமனத்தில் உறுதிப்படுத்தப்படாத பல் சத்திர சிகிச்சை நிபுணர்களும் இந்தப் பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும். மேலும் இத்திணைக்களப் பரீட்சையினைப் பூரணப்படுத்தியிராத நிர்வாகத் தரத்தைச் சேர்ந்த வைத்திய உத்தியோகத்தர் தரத்தைச் சேர்ந்தவர்களும், விசேட வைத்திய நிபுணர் தரத்தைச் சேர்ந்தவர்களும் இப்பரீட்சையின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும்.

3. **விண்ணப்பங்கள்**.- இச்சுற்று நிருபத்தில் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று விண்ணப்பதாரிகளினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 2017.03.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் நிறுவனத் தலைவரிடம் பாரமளிக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் பூரணப்படுத்தியுள்ளதாக நிறுவனத் தலைவர் சான்றுப்படுத்திய பின் விண்ணப்பமானது "சுகாதார அமைச்சு, கொழும்பு 10, இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, 'சுவசிரிபாய கட்டிடம்', பணிப்பாளர் (பரீட்சை)" அவர்களுக்கு 2017.03.30 ஆந் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலின் மூலம் அனுப்ப வேண்டும். தனது விண்ணப்பத்துடன் முகவரி எழுதப்பட்ட 35 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9" × 4" அளவுள்ள கடித உறைகள் இரண்டு அனுப்ப வேண்டும். (இதில் விரும்பிய வகையில் அலுவலக முகவரி அல்லது சொந்த முகவரியை எழுதலாம்).

**கவனிக்கவும்**.- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பம் ஏ4 தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தயாரிக்கப்பட வேண்டும். முதற்பக்கத்தில் இலக்கம் 01-04 (உ) தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 04(ஊ)-09 தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

4. **பரீட்சைக் கட்டணம்**.- (i) முதன் முறையாகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்கள், பரீட்சைக் கட்டணத்தினின்றும் விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ஒரு பாடத்திற்கு ரூபா 25 வீதம் மதிப்பிழக்கப்படாத முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மேல் தனது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு அதை செல்லுபடியற்றதாக்க வேண்டும்.

(ii) எக்காரணத்தைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சையொன்றின் பொருட்டு மாற்றவோ அல்லது மீளச் செலுத்தப்படவோ மாட்டாது.

5. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். அவ் அனுமதிப்பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி பரீட்சை

நிலைய அதிபருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) விண்ணப்பதாரர்களினால் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை நிலைய அதிபருக்குத் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம் ;
(ஈ) வலுவுள்ள கடவுச்சீட்டு.

(iii) தவிர்க்க முடியாத காரணத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாதவிடத்து சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் தங்களினது பரீட்சைச் சுட்டெண், பரீட்சை நிலையம் என்பவற்றினை பெற்றுக்கொண்டு தங்களது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய திணைக்களத் தலைவரின் கடிதத்துடன் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில், குறிப்பிடப்பட்டுள்ள சுட்டெண்ணில் தாங்கள் பரீட்சையினை மேற்கொள்ள முடியும். அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றவர்கள் கட்டாயமாக கையொப் பத்தினை உறுதிப்படுத்திக்கொண்டு வருதல் வேண்டும். (கையொப்பத்தினை உறுதிப்படுத்திய கடிதம் அல்லது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை முன்னளிப்பு செய்யாதவர்கள் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்). (சுகாதார அமைச்சின் இணையத்தள முகவரி : www.health.gov.lk).

6. **பரீட்சைத் திட்டம்**.- இப்பரீட்சை மூன்று எழுத்து மூல கட்டுரை வினாப்பத்திரங்களையும் சிங்களம்/தமிழ் வாய்மொழிப் பரீட்சையொன்றையும் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்ச்சியடைவதன் பொருட்டு ஒரு விடயத்திற்கு குறைந்தபட்சம் 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சையைப் பூரணப்படுத்திக் கொள்ளலாம்.

7. **பரீட்சைப் பாடத்திட்டம்**.-

7.1 ***எழுத்துப் பரீட்சை***

7.1.1 *தாபனவிதிக்கோவை*

(நேரம் : 02 மணித்தியாலம்) 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.
பாடவிதானம்

(i) சுகாதார அமைச்சின் சுகாதாரத் திணைக்களத்தின் பொதுவான ஒழுங்கு விதிகள்.

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகள்.

(iii) தாபனவிதிக்கோவை

I ஆம் பிரிவு - VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII அத்தியாயங்கள்.

II ஆம் பிரிவு - XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள்.

7.1.2 *வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம்*
நேரம் : 1 1/2 மணித்தியாலம். 07 வினாக்களில் 4 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.

பாடவிதானம்

சுகாதாரக் கைநூல்

(i) வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிர்வாகம்

(ii) ஆய்வுகூட சேவை முகாமைத்துவம்

(iii) மருந்து முகாமைத்துவம்

7.1.3 *கணக்கியல் :*
(நேரம் : 02 மணித்தியாலம்) 07 வினாக்களில் 04 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்,
மொத்தப்புள்ளிகள் - 100.

பாடவிதானம்

(i) சுகாதாரத் திணைக்களத்தில் களஞ்சியக் கணக்கு வைத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்

(ii) சுகாதாரத் திணைக்களத்தில் வழிகாட்டிக் கைநூலில் நிதி தொடர்பான பந்தி

(iii) சுகாதார வைத்திய உத்தியோகத்தர் ஒருவரின் நாளாந்த கடமைகளுக்கு ஏற்புடைய நிதிப்பிரமாணம்

I ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 1, 2, 78

II ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 90, 91, 101, 102, 103, 104, 105, 106, 107, 108, 109, 110, 113, 115, 118, 119

III ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 124, 125, 126, 127, 128, 131, 133, 134, 135, 136, 137, 138, 139, 140, 142, 143, 151, 152, 154, 155, 156, 189.

V ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 200, 201, 215, 225, 238, 245, 255, 257, 260

VI ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 380, 381, 382, 383, 384, 385, 386, 388, 389, 390, 391, 392, 393, 394

VII ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 488, 493

XIII ஆம் அத்தியாயம் - நிதிப் பிரமாணம் 715, 716, 756, 757, 758

பெறுகை வழிகாட்டிக் கோவை :

1 ஆம் அத்தியாயம் - அனைத்துப் பிரிவுகளும்

2 ஆம் அத்தியாயம் - 2.3, 2.4, 2.5, 2.6, 2.7, 2.8

3 ஆம் அத்தியாயம் - 3.1, 3.2, 3.3, 3.4, 3.5, 3.6, 3.7, 3.8, 3.9

7.2 ***சிங்களம்/ தமிழ் வாய்மொழிப் பரீட்சை***.- சிங்களம்/ தமிழ் ஆற்றலை அளப்பதன் பொருட்டு திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையாகும். தனது நாளாந்த கடமைகளில் ஈடுபடும் பொழுது மேலோங்கும் நிகழ்வுகள் தொடர்பாக சிங்கள மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியிலும், தமிழ் மொழி மூல உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழியிலும் கலந்துரையாடுவதற்கு உத்தியோகத்தருக்கு உள்ள ஆற்றலைப் பரீட்சித்தல்.

8. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப் பிடித்தல்**.- பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

9. தயவுசெய்து இச்சுற்றுநிரூபத்தை உங்கள் பிரிவில்/ விசேட இயக்கத்தில்/ நிறுவனத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். இத்தகவல்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

**குறிப்பு**.- இவ்வறிவித்தலில் தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் ஏதாவது வேறுபாடுகள் காணப்படின் சிங்கள மொழி மூல அறிவித்தலே வலுவுடையதாகும்.

எம். பி. எல். ரகுமான்,
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II,
சுகாதாரம், போஷணை மற்றும்
சுதேச வைத்திய அமைச்சின் செயலாளருக்காக.

சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10,
2017.03.10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பிரயோகத்தின் பொருட்டு)

**ஆரம்ப தர வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர்களுக்குமான திணைக்களப் பரீட்சை – 2017, பங்குனி**

1. (அ) (i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (தமிழில்) : -----.

(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) : -----.

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | |

(ஆ) (1) பதவி :

(i) வைத்திய உத்தியோகத்தர் : ☐

(ii) பல் சத்திர சிகிச்சை வைத்திய உத்தியோகத்தர் : ☐

(2) தகுதிகூர் நிலைக்கால நியமனம் பெற்ற திகதி : -----.

(3) ஆரம்ப தரத்திற்கு நியமிக்கப்பட்ட திகதி/ தரம் II :-----.

2. நீங்கள் இம்முறை தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் விடயங்களுக்கு முன்னால் உள்ள கூட்டினுள் "✓" அடையாளத்தை இடவும். தோற்றாவிடின் "x" குறியை இடவும்.

வைத்தியசாலைகள் மருந்துச் சாலைகள் என்பனவற்றின் நிர்வாகம் ☐ தாபன விதிக் கோவை ☐

கணக்கியல் ☐

சிங்களம் வாய்மொழி ☐ தமிழ் வாய்மொழி ☐

3. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

(உரிய கூட்டினுள் ( ✓ ) அடையாளத்தை இடவும்)

4. (அ) (i) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :-----.

(ii) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது :

மத்திய அரசின்கீழ் ☐

மாகாண அரசின்கீழ் ☐

(அ) (i) மாகாண சபையின் உரிய மாகாணம் :

(ii) அதற்குரிய மாவட்டம் :-----.

(இ) கையடக்கத் தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

(உ) கீழ்வரும் பரீட்சை நிலையங்களுள் விரும்பிய பரீட்சை நிலையம்.- *(தெரிவுசெய்யும் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரிகள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும் பரீட்சை நிலையத்திற்கு அழைக்கப்படுவர்)* பொருத்தமான கூட்டினுள் சரி "✓" அடையாளமிடுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | | களுத்துறை | | அம்பாந்தோட்டை | |
| அம்பாறை | | களுத்துறை | | காலி | |
| பதுளை | | வவுனியா | | குருநாகல் | |
| அநுராதபுரம் | | இரத்தினபுரி | | பொலநறுவை | |
| கண்டி | | மட்டக்களப்பு | | யாழ்ப்பாணம் | |
| திருகோணமலை | | | | | |

(ஊ) அனுமதிப்பத்திரம் அனுப்புவதன் பொருட்டு பிழையற்ற தெளிவாக முகவரி எழுதப்பட்ட 9" × 4" அளவுள்ள ரூபா 35.00 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்ட கடித உறைகள் இரண்டு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

(எ) (i) அஞ்சல் முகவரி (சிங்களத்தில் அல்லது தமிழில்) :-----.

(ii) அஞ்சல் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :-----.

5. (அ) இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர் களா? :-----.

(ஆ) முதன் முறை அல்லாவிடின் முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளனவா? அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதா? :-----.

| முத்திரைக் கூடு<br>(முத்திரையை ஒட்டி அதன் மீது கையொப்பமிடுக.) |
|---|

6. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவகையில்-

(i) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவைகளெனவும், நான் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன்முறையாக என்றபடியினால் கட்டணம் செலுத்தத் தேவை யில்லை எனவும்/ (முதன் முறை அல்லாதபடி யால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் ஒட்டியுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்திற்கு என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் செல்லுபடி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்பு பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதார சேவைத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைந்து நடப்பதற்கும், இப்பரீட்சை தொடர்பான நியதிச் சட்டத்தின்படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்து செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எவ்விதத் தீர்மானத்திற்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

7. சுயவிபரக் கோவையினைக் கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ் :

இவ்விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது

என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இத்திணைக்களப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இவ்விண்ணப்பப்பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பம்.

பெயர் :----.
திகதி :----.

8. நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

திரு./திருமதி/செல்வி ................................. என்பவர் எனது நிறுவனத்தில் சேவை புரியும் வைத்திய உத்தியோகத்தர் என்றும் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறை/அல்லாதபடியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/ முத்திரை ஒட்டவேண்டியதில்லை எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் எனது முன்னிலையில் கையொப்பம் இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

9. விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்

திரு./ திருமதி/ செல்வி ........................................... என்பவர் ஆரம்பதர வைத்திய உத்தியோகத்தர் ஒருவராக/ பல் சத்திர சிகிச்சை வைத்தியர் ஒருவராக எனது விசேட இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் விண்ணப்பதாரரின் பெயர் வழிக்கோவையிலுள்ள விபரங்களின்படி பிழையற்றவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவருக்குத் தகைமைகள் உண்டு எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பன்முகப்படுத்தப்பட்ட பிரிவு/ விசேட
இயக்கத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ இலச்சினை இடப்படுதல் வேண்டும்).

திகதி :-----.

(*தேவையற்றவற்றைக் கீறிவிடவும்.)

3-1137

## நீதிச் சேவை ஆணைக்குழு

### நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவையின் நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் - III இற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

அட்டவணைப்படுத்தப்பட்ட அரச சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் - III இற்கு தகைமையுடையவர்களை தெரிவுசெய்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு நீதிச் சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

2. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்குரியதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- மாதமொன்றுக்கு 28,940 ரூபா 10 x 145 - 10 x 300 - 11 x 350 - 10 x 560 - 10 x 660 - ரூபா 47,990 எனும் சம்பள அளவுத்திட்டம் இப்பதவிக்குரியதாகும். இப்பதவிக்குரிய ஆரம்ப சம்பளப்படி நிலை 28,940 ரூபா ஆகும். (2020.01.01 ஆந் திகதி வரை பொது நிர்வாகச் சுற்றுநிருபம் 03/ 2016 அட்டவணை II இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.)

4. **வயது**.- விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு விண்ணப்பதாரிகள் 18 வயதிற்குக் குறையாதவர்களாகவும் 30 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருக்க வேண்டும். (அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.)

5. **கல்வித் தகைமைகள்**.- விண்ணப்பதாரிகள் கீழ்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருக்க வேண்டும் :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளின்போது சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் மொழி மற்றும் கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டியதுடன் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும். எவ்வாறெனினும் ஒரு அமர்வின்போது 05 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) அதற்குச் சமமான அல்லது அதனைவிட உயர்வான தகைமைகள் ; மற்றும்

(இ) தேசிய இளைஞர் சேவைகள் சபை, தேசிய பயிலுநர் மற்றும் பயிற்சியளிக்கும் அதிகார சபை, தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அரச பதிவுடைய பயிற்சி நிறுவனமொன்றில் தட்டெழுத்து (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) பாடநெறியொன்றினை விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் சிறந்த முறையில் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஒன்று நடாத்தப் படுவதுடன் அப்பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைவாக உரிய புள்ளி மட்டத்தினை அடைந்த விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின் பின்னர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். அவ்வாறு சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருக்க வேண்டும்.

7. வினாப்பத்திரங்கள்.- சிங்கள/ தமிழ் மொழி மூலம் :

| | |
|---|---|
| (அ) சிங்கள/ தமிழ் மொழி மற்றும் கட்டுரையாக்கம் | 100 புள்ளிகள் |
| (ஆ) சிங்கள/ தமிழ் தட்டெழுத்து (நிமிடத்திற்கு 20 சொற்கள் எனும் ஆகக்குறைந்த வேகத்தில் 20 நிமிடங்கள் தட்டெழுத்து செய்தல்) | 150 புள்ளிகள் |
| (இ) பொது அறிவு | 50 புள்ளிகள் |
| (ஈ) சிங்கள/ தமிழ் சுருக்கெழுத்து (விருப்பத்திற்குரியது) | 50 புள்ளிகள் |
| (உ) நேர்முகப் பரீட்சை | 50 புள்ளிகள் |
| மொத்தம் | 400 புள்ளிகள் |

ஆங்கில மொழி மூலம் :

| | |
|---|---|
| (அ) ஆங்கில மொழி மற்றும் கட்டுரையாக்கம் | 100 புள்ளிகள் |
| (ஆ) ஆங்கிலத் தட்டெழுத்து (நிமிடத்திற்கு 40 சொற்கள் எனும் ஆகக்குறைந்த வேகத்தில் 20 நிமிடங்கள் தட்டெழுத்து செய்தல்) | 150 புள்ளிகள் |
| (இ) பொது அறிவு | 50 புள்ளிகள் |
| (ஈ) ஆங்கில சுருக்கெழுத்து (விருப்பத்திற்குரியது) | 50 புள்ளிகள் |
| (உ) நேர்முகப் பரீட்சை | 50 புள்ளிகள் |
| மொத்தம் | 400 புள்ளிகள் |

**குறிப்பு** :

(i) சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் சுருக்கெழுத்து வினாப்பத்திரம் கட்டாயமானதன்று. எனினும் அது மேலதிக தகைமை என்பதனால் சுருக்கெழுத்தில் தேர்ச்சியுடைய விண்ணப்ப தாரிகள் இவ்வினாப்பத்திரத்திற்குத் தோற்று மாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

(ii) விடைப்பத்திரங்களுக்கு புள்ளிகள் வழங்கும் போது தூய்மை மற்றும் செவ்வைத் தன்மை கருத்திற்கொள்ளப்படும்.

8. இப்பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக மாத்திரமே விண்ணப்பதாரிகளால் தங்களது விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும்போது நிர்வாகக் கட்டணமாக மீளளிக்கப்படாத 500 ரூபாவினை "நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளரின் பெயரில் டாம் வீதி, மக்கள் வங்கிக் கிளையில் பேணப்பட்டு வரும் 297100199025039" எனும் கணக்கில் வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட வைப்புச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்ட வேண்டும்.

9. விண்ணப்பப்படிவங்களை 2017.04.28 ஆந் திகதிக்கு முன்னர் "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம், கொழும்பு 12" எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III பதவிக்கான விண்ணப்பப்படிவம் - 2017" எனக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்ப வேண்டும்.

10. விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக எழும் சிக்கல்களின் போது நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

பிரதீப் ஜயதிலக்க,
மேல் நீதிமன்ற நீதிபதி/ செயலாளர் (பதில்),
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2017, மாச்சு 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதிச் சேவை ஆணைக்குழு**

நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவையின் நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் - III இற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017

சுட்டெண் : [ ]
(அலுவலக உபயோகத்திற்காக மட்டும்)

**(கவனிக்க.**- விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் தெளிவாகவும் செவ்வையாகவும் விண்ணப்பப்படிவங்கள் நிரப்பப்படல் வேண்டும். உரிய கூட்டில் உரிய இலக்கத்தை இடவும்).

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :----.
 (ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (தமிழில்) : ----.
 (iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. பால் நிலை :
ஆண் - 01
பெண் - 02 ☐

3. (i) நிரந்தர முகவரி :----.
(ii) மாவட்டம் :----.

4. தொலைபேசி இலக்கம் :
(i) வீடு :----.
(ii) கைத்தொலைபேசி :----.

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. (அ) பிறந்த திகதி :----.
(ஆ) 2017.04.28 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

7. அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர் எனின்-

(i) அமைச்சு/ திணைக்களம் :----.
(ii) தற்போது வகிக்கும் பதவி :----.
(iii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
(iv) அப்பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :----.
(v) அலுவலக முகவரி :----.

8. கல்வித் தகைமைகள் (ஒவ்வொரு பரீட்சையினதும் பெறுபேறுகளைச் சுட்டெண்களுடன் வெவ்வேறாகக் குறிப்பிடல் வேண்டும்) :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :
வருடம் :----. சுட்டெண் :----.

| தொ. இல. | பாடம் | சித்தி |
|---|---|---|
| | | |

வருடம் :----. சுட்டெண் :----.

| தொ. இல. | பாடம் | சித்தி |
|---|---|---|
| | | |

(ஆ) அதற்குச் சமமான அல்லது அதனைவிட உயர்வான தகைமைகள் :----.

(இ) சித்திபெற்றுள்ள தட்டெழுத்துப் பாடநெறி தொடர்பான விபரம் :----.
(வர்த்தமானிப் பத்திரிகையின் 05(இ) பிரிவிற்கு அமைவாக உள்ளடக்கவும்.)

**குறிப்பு**.- சுற்றுநிருபத்திற்கு அமைவாக விண்ணப்ப தாரிகள் உரிய பெறுமதியினை வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை வேறாக்க முடியாத வாறு இவ்விடத்தில் ஒட்டவும்.

| |
|---|
| |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை மற்றும் உண்மையானவை என உறுதிப்படுத்துவதுடன் இப்பரீட்சைக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டவிதிகளைப் பின்பற்றுவதற்கு உடன்படுகின்றேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய் யானது எனவோ பிழையானது எனவோ நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் தெரிய வந்தால் அக்காரணத்திற்காக இப்பதவிக்குத் தகைமையற்றவராவதற்கும், இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அத்தவறு தெரியவருமெனின் எவ்வித நட்டயீடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்பதனையும் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

(தற்போது அரச சேவையில் உள்ள
விண்ணப்பதாரிகளுக்குப் பொருந்தாது.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .. ...................................... என்பவர் எனக்குப் பிரத்தியேகமான முறையில் நன்கு அறிமுகமானவர் எனவும், எனது முன்னிலையில் ........................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

(விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி ஒருவர் அல்லது ரூ. 47,615 அல்லது அதற்கு அதிகமான மாதாந்தக் கூட்டிணைந்த சம்பளத்தினைப் பெறும் அரசின் நிரந்தரப் பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் உறுதிப்படுத்த வேண்டும்.)

திணைக்களத் தலைவரின் விதந்துரை

........................................ பணியாற்றும் திரு./ திருமதி/ செல்வி ......................................... என்பவர் அட்டவணைப்படுத்தப்பட்ட

அரச உத்தியோகத்தர் சேவையின் நீதிமன்ற முகாமைத்துவ உதவிச் சேவைக்குரிய நீதிமன்ற தட்டெழுத்தாளர் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) தரம் III இற்குத் தேவையான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைக் கொண்டுள்ளார் எனவும், இவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் தெரிவித்து இவ்விண்ணப்பப்படிவத்தை விதந்துரைத்துச் சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்,
முத்திரை.

திகதி :----.

*3-1122*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.